**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.50/2023** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.18** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | செந்தாமரைகண்ணன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **03.03.2026**

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாடாலூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வளராக பணிபுரிகிறேன். கடந்த 26.03.2023ம் தேதி பெரம்பலூர் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை 09.30 மணியளவில் அ.சா.1 நிலையம் ஆஜராகிகொடுத்த புகாரை பெற்று நிலைய குற்றஎண்.208/2023 சட்டப்பிரிவு 294(b), 302 இதச படி முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்தேன். நான் பதிவுசெய்த முதல்தகவல்அறிக்கை **அ.சா.ஆ.17**. அசல் புகாரையும், முதல்தகவல் அறிக்கையும் நீதித்துறை நடுவர் பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை உயர் அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பிவைத்தேன். ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 புகாரில் புகார்கொடுத்த தேதி குறிப்பிடவில்லை என்றால் புகாரின் முதல்பக்கத்தில் வலதுபுற மேல்பக்கத்தில் தேதி குறிப்பிடவில்லை. புகாரின் உள்அடக்கத்தில் 26.03.2023 என்று கூறியுள்ளார். புகார் கொடுக்க அ.சா.1உடன் வேறு யாரும் வரவில்லை. புகாரை செல்வகுமார் கைப்பட எழுதி கொண்டுவந்தார். காவல்நிலையத்திற்கு வந்து அவர் பேப்பரில் எழுதிகொடுத்தார்.

ஆய்வாளர் விசாரணையின் போது நான் அ.சா.1 புகார் கொடுத்த நேரம் 09.15 என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் சம்பவம் நடந்த நாள் 25.03.2023 நேரம் மதியம் 11.00 முதல் இரவு 10.30 மணிவரை பிரச்சனை நடந்துகொண்டிருந்தது என்று கூறியுள்ளார். முதல்தகவல்அறிக்கை காலம் எண் 3சி–யில் பொதுநாட்குறிப்பு பற்றிய விவரங்கள் பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன காலை 09.30 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி புகார்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன நேரத்தில் வழக்கு பதிவுசெய்திருந்தால் பொதுநாட்குறிப்பு பதிவு பற்றிய விவரங்களை அதில் குறிப்பிட்டு இருப்பேன் என்றும் நான் சொன்ன நேரத்தில் வழக்கு பதிவு செய்யாததால் தான் அதுபற்றிய விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவஇடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். 1கி.மீட்டர் தூரம் தான் இருக்கும் என்றும், வழக்கிற்காக பொய்யாக 2கி.மீட்டர் தூரம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. நான் சம்பவஇடம் செல்லவில்லை. முதல்தகவல் அறிக்கை நகலை உயர்அதிகாரியிடம் நான் மதியம் 03.00 மணியளவில் ஒப்படைத்தேன். நீதிமன்றத்திற்கு மோகன் என்பவர் மூலம் 02.30 மணியளவில் அனுப்பிவைத்தேன். வழக்கு பதிவுசெய்த அன்றே ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளரின் மேற்பார்வைக்கு 10.30 மணிக்கு நான் வைத்தபோது நான்விசாரித்தார். நான் வாக்குமூலத்தில் கூறியுள்ள படி புகாரை முறையாக பதிவுசெய்யவில்லை என்றும், நான் சொன்னநேரத்தில் நீதிமன்றம் மற்றும் உயர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>:இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.